[1975 அக்டோபர் 30

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் அரசு மருத்துவ மனைக்கு நோயாளிகள் தங்குவதற்கு போதுமான கூடுதல் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

மாயூரம் அரசு மருத்துவ மனை.

* 131 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசினர் மருத்துவ மனையில் இருதய பரிசோதனைப் பிரிவு ஏற்படுத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாயூரம் அரசினர் மருத்துவ மனை, தாலுக்கா தலைநகரத்தில் இருக்கக் கூடிய மருத்துவ மனையாகும். மாயூரம், மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ளவர்கள் இருதய பரிசோதனை செய்துகொள்ள வேண்டுமென்றால் கும்பகோணம் அல்லது தஞ்சைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. எனவே, குறுகிய அளவுக்காவது அந்த முயற்சியினை மேற்கொண்டு, அத்தகைய இருதய பரிசோதனை செய்யக்கூடிய பிரிவு ஒன்றினை மாயூரம் அரசினர் மருத்துவ மனையில் ஏற்பாடு செய்வதற்கு இனிமேலாவது அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்போது கும்பகோணத்தில் இருதய பரிசோதனை செய்துகொண்டார் என்று எனக்குத் தெரியாது. கும்பகோணம் போனாலும் கிடையாது. இப்பொழுது மருத்துவ மனைகளில், மருத்துவக் கல்லூரியோடு இணைந்த மருத்துவ மனைகளில் கூட எல்லா இடங்களிலும் ஏற்படுத்த இன்னும் வசதி இல்லை. ஆனால், மருத்துவப் பேராசிரியராகவுள்ள சிலர் இருதய பரிசோதனை செய்யும் ஆற்றல் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

1975 அக்டோபர் 30]

மாவட்ட மருத்துவ மனைகளில்—சேலத்திலும், திருச்சியிலும் ஏற்படுத்துவது என்ற ஆலோசனை பெறப்பட்டு, சேலத்தில் ஏற்படுத்துவதற்கு ஆறு இலட்ச ரூபாய் மாவட்ட நல நிதியிலிருந்தும், இரயில்வே செஸ் ஃபண்டிலிருந்தும் தர இசைந்திருக்கிறார்கள். அந்த நிதி இந்த மாதந்தான் கிடைக்கும். அதை வைத்து சேலம் மாவட்ட மருத்துவ மனையில் ஏற்பாடு செய்யலாம்.

திருச்சி மாவட்ட மருத்துவ மனையில் ஏற்படுத்துவதற்கு சில உதவித் தொகைகள் கிடைக்கும் என்று தெரிவித்திருக்கிற அடிப்படையில் மாவட்ட மருத்துவ மனைகள் இரண்டு இடங்களில் தான் இப்பொழுது ஏற்படுத்தப்படக்கூடிய நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது.

எந்த வட்ட மருத்துவ மனையிலும் இல்லை. இருதய பரிசோதனை என்பது டாக்டர்கள் தங்கள் திறமையினால் தாங்களே நடத்துகிறது ஒன்று; 'இன்டென்சிவ் கார்டியக் கேர்' என்ற முறையில் ஏற்படுத்துவது ஒன்று. அப்படி ஏற்படுத்துவதைத்தான் இருதய பரிசோதனைப் பிரிவு என்று கருதுகிறோம். அதற்கு குளிர்சாதன அறை தேவை. ஐந்தாறு இலட்ச ரூபாய்க்குக் குறையாது நிதி தேவை.

திரு. சி. ஆறுமுகம்: அமைச்சரவர்கள், இரண்டு மாவட்ட மருத்துவ மனைகளில் இருதய பரிசோதனை வசதி இருப்பதாக, அறிவித்திருக்கிறார்கள். மாவட்ட அளவில் இருதய பரிசோதனை நிலையம் இல்லாததால் தலைநகரில் இருக்கும் பெரிய மருத்துவ மனையில் பெருத்த நெரிசல் உண்டாகிறது. அதைக் கருத்திற்கொண்டு, மாவட்ட அளவில் இந்த இருதய பரிசோதனை நிலையங்களை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தலைநகரம் சென்னைதான். ஆகவே, அவரைப் பொறுத்த வரையில், சென்னையில் எப்போதும் எந்தவிதமான இருதய பரிசோதனையும் நடத்த முடியும். மாவட்ட மருத்துவ மனையில் அமைக்க கட்டட வசதி, அதற்கான தனி கருவி நிலையை ஏற்படுத்த குறைந்தது ஆறு இலட்சம் ரூபாயும், அதில் சிறப்பான திறமை பெற்றவர்கள், அதற்காக ஓராண்டுக்

காலம் குறைந்த அளவுக்குத் தேர்ச்சி பெற்றவர்களைத்தான் அதிலே நியமிக்க வேண்டும். இவைகளையெல்லாம் இன்றைக்குத் தொடங்கினால்கூட அதற்கான வசதிகள் கிடைத்து, அமைப்பை ஏற்படுத்த ஏறத்தாழ மூன்று நான்கு ஆண்டுக் காலம் ஆகும்.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, இருதய நோய் என்பது ஒரு ஜனரஞ்சகமான நோயாக மாறிவிட்டது. 'இன்டென்ஸிவ் கேர் யூனிட்' அமைக்க வேண்டும், எலெக்ட்ரோ கார்டியோகிராம் என்று சொல்லப்படுகிற அந்தக் கருவியை, தனிப்பட்டவர்கள்கூட வைத்திருக்கிறார்கள். அப்படி முதல் உதவி அளிக்குமளவுக்காவது வட்ட, மாவட்ட அளவில் அமைப்பது நலமாக இருக்கும். அதைப்பற்றி அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாவட்ட மருத்துவ மனைகளில் இந்த ஏற்பாடு செய்வதற்கான ஆலோசனை இருக்கிறது. சில மாவட்ட மருத்துவ மனைகளில் அதற்கான அடிப்படை ஏற்பாடுகள் நடைபெற்றிருப்பதாக நான் நினைக்கிறேன். சரியான புள்ளிவிவரம் தனிக் கேள்வி கேட்டால் தரப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இன்டென்ஸிவ் கேர் யூனிட் சென்னையில் நல்ல முறையில் இருப்பதாகத் தெரிகிறது. எல்லா மாவட்ட மருத்துவ மனைகளிலும் வைக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதைத் துரிதமாக வைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, எல்லா மாவட்ட மருத்துவ மனைகளிலும் வைக்கவேண்டும் என்று அரசு உள்ளபடியே ஆசைப்படுகிறது. 'ஆசைப்படுகிறது' என்று சொல்வதை "உடனடியாகச் செய்யும்" என்று சொல்வதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. ஒவ்வொரு மாவட்ட மருத்துவ மனையிலும் ஏற்படுத்துவதென்றால், ஏழெட்டு இலட்சம் ரூபாய் தேவைப்படும். சில மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில்கூட அந்தத் தனிப் பகுதி இல்லை. அதை ஏற்படுத்துவதற்கு மருத்துவக் கல்விக் துறை மேலாக முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். மதுரை, தஞ்சை போன்ற இடங்களில் விரிவாக ஏற்படுத்தி, கார்டியாலஜி ஸ்பெஷலிஸ்ட்கள் அதில் இடம் பெற முயற்சி நடைபெறுகிறது.

1975 அக்டோபர் 30]

திரு. என். கிட்டப்பா : மாயூரம் அரசினர் மருத்துவ மனையில் குறைந்தபட்சம் ஈ.சி.ஜி. நிலையம் ஒன்றை இணைக்க அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தாலுக்கா மருத்துவ மனைகளில் வேறுபல அடிப்படைக் காரியங்கள் நடத்தப்பட வேண்டியிருக்கின்றன. அதற்கிடையில் இதற்கென தனி நிதி கிடைத்தால் உடனடியாக அதைச் செய்வதுபற்றி ஆலோசிக்கலாம்.

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை

*132 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எந்த அடிப்படையில் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் டாக்டர்கள் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகிறது ?

(இ) டாக்டர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) மருத்துவச் சட்டத் தொகுப்பு விதிகளின் (Medical Code) பிரகாரம் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அதற்குரிய எண்ணிக்கைப்படி டாக்டர்கள் இருக்கிறார்கள்.

(இ) எழாது.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, மருத்துவ மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் டாக்டர்களை நியமிக்கிறார்கள். நாட்டில் ஏராளமான பேர் நோய்வாய்ப்பட்டு மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டு, படுக்கை வசதியில்லாமல், கீழே படுக்க வைக்கப்படுகிறார்கள். அந்த எண்ணிக்கையினையும் கருத்திற்கொண்டு டாக்டர்களை நியமித்தால் மக்களுக்கு வசதியாக இருக்கும், அதைச் செய்ய அரசு முன்வருமா ?